# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.56/2022.

Prosecution witness for P.W.8.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. வைகுண்ட ராமசாமி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.12.2024.

A1 died. A2 absent. 317 Cr.PC. Petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கொட்டாரக்குறிச்சியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன முத்துவை தெரியும். வழக்கு பற்றி தெரியும். உடன்குடி அருகில் மணிநகரில் சுடலைமாடசாமி கோவிலில் நான் பூஜை செய்து வருகிறேன். 05.07.2016 அன்று காலை 7 மணியளவில் பக்கத்து தோட்டத்துக்காரரான இந்திராணி என்பவர் என் தம்பி குமாருக்கு கைபேசி மூலம் கோவில் திறந்திருப்பதாகவும், உண்டியல் உடைக்கப்பட்டிருப்பதாகவும், சில்லரைகள் சிதறி கிடப்பதாகவும், மூக்கம்மாள் என்பவர் அடிபட்டிருபபதாகவும், அவரை மருத்துவமனைக்கு ஏற்றி சென்றிருப்பதாகவும், முத்து என்பவர் வாய், கை கட்டப்பட்டு இறந்து கிடப்பதாகவும் தகவல் சொன்னார். அதுகுறித்து நான் அசா7 க்கு தகவல் சொன்னேன். அசா7 சம்பவ இடத்திற்கு சென்று பார்த்துவிட்டு மேற்படி மூக்கமாள் சிகிச்சைக்கு சென்றுவிட்டதாகவும், மேற்படி முத்து கைகள், கால்கள், வாய் கட்டப்பட்ட நிலையில் உயிரில்லாமல் கோவிலில் கிடந்ததாகவும், கோவிலில் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டு சில்லரைகள் மட்டும் அங்கு இருந்ததாகவும், பிறகு முததுவின் பிரேதம் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அசா7 சொன்னார். அசா1 போலீசில் புகார் கொடுத்ததாகவும் அசா7 சொன்னார்.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2024.12.05 18:38:31 +0530

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2024.12.05 18:38:36 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.